# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## VAC NO. 2/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW 17 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Venkatesan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of **28th day of November, 2025.**

(Accused present)

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

14.03.2011 அன்று எதிரியிடமிருந்து விளக்கம் கேட்டு கொடுக்கப்பட்ட statement 1–7 எதிரி எந்த வித விளக்கமும் கொடுக்கவில்லை. மேற்படி எப்ஓஎண் final oppourtunity notice 14.03.2012 அன்று எதிரியிடம் நேரடியாக சார்வு செய்யப்பட்டு

அவரிடமிருந்து acknowlegment பெற்றுக்கொண்டேன். அந்த கடிதம் **அ.த.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு அவர் எந்த பதிலும் கொடுக்கவில்லை. என்னுடைய விசாரணையில் எதிரி தன் மீதும் தன் குடும்பத்தினர் மீது 01.04.1999 முதல் 31.03.2004 வரை அவருடைய வருமானத்திற்கு மீறி ரூ.22,21,641.28/– காசுகள் சொத்துக்களாக சேர்த்துள்ளார் என்று என்னுடைய புலன் விசாரணையில் தெரியவந்தது. இதன் படி எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்ய இசைவாணை வேண்டி இயக்குநர் அலுவலகத்திற்கு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு நான் என்னுடைய விசாரணை அறிக்கையை அனுப்பி வைத்தேன். அதன்படி இசைவாணை வழங்கும் அதிகாரி திரு.ஆர்.ஜி.சக்தி சரவணன் அவர்களை இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கோப்புக்களோடு சந்தித்து அவரின் சந்தேகத்தை நிவிர்த்தி செய்தேன். பின்னர் இயக்குநர் அலுவலகம் மூலமாக 17.02.2012 அன்று எதிரி மீது குற்ற வழக்கு தொடர இசைவாணை கிடைக்கபெற்றது. அந்த இசைவாணை ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இசைவாணை வழங்கிய அதிகாரி திரு.ஆர்.ஜி.சக்தி சரவணன் அவர்களை 20.02.2012 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் எதிரி வி.வீராச்சாமி வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்ததாக பிரிவு 13(2) உ/இ. 13(1) (e) ஊழல் தடுப்பு சட்டம் 1988 –ன் கீழ் நீதிமன்றம் முன்பு 10.07.2012 அன்று இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி என்னுடைய இறுதியறிக்கையில் எதிரி தன்னுடைய வருமானத்திற்கு மீறி 286.33% சதவிகிதம் சொத்து சேர்த்துள்ளார். என்னுடைய புலன் விசாரணையின் போது எதிரி மற்றும் அவருடைய மனைவியின் பேரில் உடைய டிஎன்எஸ்ஏசி வங்கி கணக்கு எண்.420 மற்றும் 560 statement of account டிஎன்எஸ்ஏசி வங்கி, முகப்பேர் கிளையில் இருந்து பெற்றேன். எதிரி மற்றும் எதிரியின் மனைவி பெயரில் உள்ள statement of account **அ.த.சா.ஆ.24 (2 வரிசை)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திரு.வி.கிருஷ்ணம்மாள், வி.செல்வகுமார் ஆகியோர் கொடுத்த Rental advance receipt 06.10.2003 ரூ.30,000/– திரு.வெங்கடேசன் என்பவருக்கு கொடுத்த ரசீதை தான் நான் விசாரணையின்

போது கைப்பற்றினேன். மேற்படி 06.10.2003 தேதியிட்ட Rental advance receipt **அ.த.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திரு.முத்துப்பாண்டியன் என்பவரிடம் 15.10.2003 தேதியில் குறிப்பிட்டு கொடுக்கப்பட்ட ரூ.50,000/- திரு. முத்துப்பாண்டியன் என்பவருக்கு கொடுத்த ரசீதை தான் நான் விசாரணையின் போது கைப்பற்றினேன். மேற்படி 15.10.2003 தேதியிட்ட Rental advance receipt **அ.த.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திரு.சுப்ரமணியன் என்பவரிடம் 10.10.2003 தேதியில் குறிப்பிட்டு கொடுக்கப்பட்ட ரூ.30,000/- திரு.சுப்ரமணியன் என்பவருக்கு கொடுத்த ரசீதை தான் நான் விசாரணையின் போது கைப்பற்றினேன். மேற்படி 10.10.2003 தேதியிட்ட Rental advance receipt **அ.த.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.01.2006 தேதியிட்ட டிவிஏசி மூலமாக Special Commissioner and Director of Statistics Department க்கு Family Consumption details கேட்டு கடிதம் அனுப்பினேன். மேற்படி கடிதம் **அ.த.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரிதரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). துவாரகா தாஸ் கோவர்த்தன தாஸ் வைஷ்ணவா கல்லூரியின் முதல்வரிடமிருந்து 01.12.2006 அன்று தேதியிட்ட எதிரியின் மகன் முருகேசன் என்பவரின் படிப்பு செலவுக்கான கட்டணம் விவரம் பெறப்பட்டது. மேற்படி கல்லூரியிலிருந்து பெறப்பட்ட கட்டண விவரம் **அ.த.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாய் மூகாம்பிகை பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வரிடமிருந்து 02.12.2006 அன்று தேதியிட்ட எதிரியின் மகன் வி.செல்வகுமார் என்பவரின் படிப்பு செலவுக்கான கட்டணம் விவரம் பெறப்பட்டது. மேற்படி கல்லூரியிலிருந்து பெறப்பட்ட கட்டண விவரம் **அ.த.சா.ஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வீட்டு எண்.1/598, 1/599 வள்ளியம்மை தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை மற்றும் 1/67, முகப்பேர் மேற்கு, எம்எம்டிஏ திட்டம், சென்னை அந்த வீடுகளுக்கான வீட்டு சொத்து வரி பதிவு அட்டையை விசாரணையின் போது கைப்பற்றினேன். மேற்படி ஆவணம் **அ.த.சா.ஆ.31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வீட்டு எண்.1/598, 1/599 வள்ளியம்மை தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை மற்றும் 1/67, முகப்பேர் மேற்கு,

எம்எம்டிஏ திட்டம், சென்னை அந்த வீடுகளுக்கான மின்கட்டண விவரங்களை விசாரணையின் போது கைப்பற்றினேன். மேற்படி மின்கட்டண விவரம் **அ.த.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.12.2003 திரு.கிருஷ்ணம்மாள் அவர்களின் தொலைபேசி எண் 26256507 அவற்றின் 11.06.2005 மாதத்திற்கான தொலைபேசி பில் –ஐ விசாரணையின் போது பெற்றேன். மேற்படி தொலைபேசி கட்டண பில் **அ.த.சா.ஆ.33** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.02.2007 அன்று ஆய்வாளர் திரு.பரணிகுமார் அவர்கள் திரு.சிவசுப்ரமணியன் என்பவர் கொடுத்த எல்ஐசி பீரிமியம் சம்மந்தப்பட்ட கடிதம் மற்றும் பீரிமியம் செலுத்திய தொகை ஆகிய கடிதங்களை விசாரணையின் போது பெற்றுக்கொண்டேன். மேற்படி கடிதம் மற்றும் பீரிமியம் குறித்த விவரங்கள் **அ.த.சா.ஆ.34** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை என்னுடைய இறுதியறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கில் விசாரணை முடித்து எதிரியிடமிருந்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. எதிரியிடம் விவரம் கேட்டு ஒரு கடிதம் கொடுத்தேன் அவர் பதில் கொடுக்கவில்லை.இந்த வழக்கில் எதிரியின் மனைவி கிருஷ்ணம்மாள் மற்றும் எதிரியின் மகன் செல்வகுமார் ஆகியோரை சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்றால் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் இருவரும் முக்கியமான சாட்சிகள் என்றால் இவ்வழக்கில் அனைவரும் முக்கியமான சாட்சிகள்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.